1973 நவம்பர் 21]

வந்திருக்கும் என்று நினைக்கிறேன். இது போன்ற நடவடிக்கைகள் எடுப்பது வியாபாரிகளுக்கும் விற்பனை வரி இலாகாவில் இருப்பவர்களுக்கும் இடையே மனக்கசப்பு ஏற்படுவதற்குக் காரணமாக அமைத்துவிடும் என்பதை யொட்டி இது போன்ற நடவடிக்கைகளை அந்த இலாகா எடுக்காமலிருக்க அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, விற்பனை வரி இலாகா இது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடாது என்று அரசு ஆணை பிறப்பித்திருக்கிறது. ஆனால் எங்கும் கட்டாயப்படுத்தப்பட்டதாக அரசுக்கு எந்தத் தகவலும் இல்லை.

Bus mishap on the Ghat Road from Ootacamund to Mettupalayam

*1 Q.—THIRU L. BALARAMAN (on behalf of THIRU S. VELLAPANDIAN): Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether many women were killed on the Ghat Road from Ootacamund to Mettupalayam in a bus mishap about the 5th December 1972; and

(b) if so, the details thereof?

உதகமண்டலம்-மேட்டுப்பாளையம் மலைச் சாலையில் பேருந்து விபத்து

திரு. எல். பலராமன் (திரு. எஸ். வெள்ளபாண்டியன் சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) 1972 டிசம்பர் 5 ஆம் நாள் அளவில், உதகமண்டலத்திலிருந்து மேட்டுப்பாளையம் செல்லும் மலைச்சாலையில், பேருந்து விபத்து மூலம் மகளிர் பலர் உயிர் துறந்தனரா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம் உதகமண்டலத்திலிருந்து கோயம்புத்தூருக்குச் செல்லும் வழியில் குன்னூரிலிருந்து சுமார் ஒரு மைல் தள்ளி காந்திபுரம் அருகில் 1972 டிசம்பர் 5-ல் ஏற்பட்ட பேருந்து விபத்தில் நான்கு பெண்கள் உட்பட ஆறு பேர் இறந்தனர்.

(இ) இதுபற்றிக் கோரியுள்ள விவரங்கள் மேலவை முன் வைக்கப்படும் விவர அறிக்கையில் @ கொடுக்கப்பட்டுள்ளன.

@ 110 ஆம் பக்கத்தில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.